# தமிழர் பாரம்பரியத்தில் உடல் பற்றிய கருத்தியல்கள்

# (Concepts of Body in Tamils Heritage)

**இ**ந்த ஆய்வுப் பொருண்மையானது தமிழர் பாரம்பரியத்தில் மனித உடல் காட்சிப்படுத்தப்பட்டுள்ள முறைமை தொடர்பான ஒரு நுண்ணோக்கு (Critical Study) ஆகும். தமிழ் இலக்கிய ஆக்கங்களே இந்நுண்ணோக்குக்கான முக்கிய சான்றாதாரங்களாக அமையவுள்ளன. தமிழ் இலக்கியப் பரப்பினூடாகப் புலப்படும் உடல்பற்றிய கருத்தியல்கள் பலநிலைப்படுவன. அவற்றுள் முக்கியமான சில கருத்தாக்கங்களை மூவகை நோக்குநிலைகள் ஊடாக அணுகும் முயற்சியே இத்தலைப்பில் மேற்கொள்ளப்படவுள்ளது. அவை:

முதலாவது நோக்குநிலையானது அழகியல் சார்ந்ததாகும். இப்பார்வையானது *கலாநிதி கௌசல்யா சுப்பிரமணியம் அவர்களால்* **'தமிழரின் அழகியல் நோக்கில் உடல் பற்றிய கருத்தியல்'** என்ற தலைப்பில் மேற்கொள்ளப்படவுள்ளது. கலை மற்றும் இலக்கியம்சார் நிலைகளில் ஆண்-பெண் உடல்கள் பற்றி நிலவிவந்துள்ள இலட்சியப்பாங்கான உணர்வோட்டங்கள் மற்றும் கற்பனைகள் சார்ந்த கருத்தாக்கங்கள் என்பன இதில் இவரால் கவனத்திற் கொள்ளப்படவுள்ளன.

இரண்டாவதுவகை நோக்குநிலையானது சமயநம்பிக்கைப் பின்புலம் சார்ந்ததாகும். சமணம் பௌத்தம், சைவம் மற்றும் வைணவம் ஆகிய பாரம்பரிய சமயங்கள் உடல் பற்றிக் கொண்டிருந்த கருத்தாக்கங்களின் பொதுமை மற்றும் வேறுபாடுகள் இப்பார்வையில் கவனத்துக்குரியவாகின்றன. இவ்வகையில் முக்கியமாக உடலை வெறுத்தொதுக்குவதும் மாறாக அதனை 'இறையநுபவத்துக்கான பற்றுக்கோடு' ஆகக் கொண்டு பேணிநிற்பதுமான இரு முக்கிய எண்ணப்பாங்குகளை மேற்படி சமயமரபுகள் ஊடாக நாம் காண முடிகின்றது. இவை பற்றிய நுண்ணோக்காக அமையும் இப்பார்வையானது *கலாநிதி நா. சுப்பிரமணியன் அவர்களால்* **'தமிழரின் சமயநம்பிக்கைகளின் தளத்தில் உடல் பற்றிய கருத்தியல்'** என்ற தலைப்பில் மேற்கொள்ளப்படவுள்ளது.

மூன்றாவதுவகை நோக்குநிலையானது சமூக ஊடாட்டத்தில் உடல்சார்ந்து நிகழ்ந்துள்ள கருத்தோட்டங்கள் பற்றியதாகும். சமூக உறவுகளில் உடலின் பங்கு தொடர்பான உணர்வோட்டம் இதிலே கவனத்திற் கொள்ளப்படவுள்ளது. தமிழர் பாரம்பரியத்திலே குறிப்பாக, காதல் மற்றும் குடும்ப உறவுநிலைகளிலும் சமூக நிகழ்வுகளிலும் உடலை மையப்படுத்திய வேற்றுமையுணர்வுக் கருத்தோட்டங்கள் நிலவிவருகின்றமை வெளிப்படை. இவ்வாறான கருத்தோட்டங்களின் உருவாக்க நிலை சார் மூலங்களை பண்டைத் தமிழ் இலக்கியங்களினூடாக இனங்காண்பதான ஆய்வுத்

தேடலாக இப் பார்வை அமையவுள்ளது. இதனை *திரு. க. நவம் அவர்கள்*, **‘தமிழரின் சமூக ஊடாட்டங்களில் உடல் பற்றிய கருத்தியல்’** என்ற தலைப்பினூடாக அணுகவுள்ளார்.

இவ்வாய்வரங்கை திரு. பொ. கனகசபாபதி அவர்கள் (மேனாள் அதிபர் மகாஜனாக் கல்லூரி, தெல்லிப்பளை, இலங்கை) தலைமையேற்று வழிநடத்தவுள்ளார்.